## இணைப்பு

## வழிகாட்டு நெறிமுறைகள்

**விண்ணப்பத்தினை பதிவு செய்தல்**

1. விண்ணப்பிக்கும் செயல்முறையானது, தொழில் நுட்பக் கல்வி இயக்கக அறிவிப்பாணையினைத் தொடர்ந்து ஆரம்பமாகும்.
2. மாணாக்கர்கள் www.tneaonline.org என்ற இணையதளம் மூலமாக எந்த இடத்திலிருந்தும் அல்லது மாணாக்கர் வசதி மையம் மூலமாகவோ, உரிய கட்டணம் மற்றும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
    - ஒன்றிற்கு மேற்பட்ட மாணாக்கர்கள் ஒரே மதிப்பெண் பெறும்பொழுது சமவாய்ப்பு எண் (Random Number) மூலமாக தரவரிசை அளிக்கப்படும்.

**சான்றிதழ் சரிபார்த்தல்:**

3. பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்கள், மாணாக்கர் வசதி மையங்களில் இணைய வழியாக சரிபார்க்கப்படும். விளையாட்டு வீரர்களுக்கான சான்றிதழ்கள் மட்டும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) உதவியுடன் விண்ணப்பதாரர்களை நேரில் வரவழைத்து சரிபார்க்கப்படும்.

4. தகுதிவாய்ந்த அனைத்து மாணாக்கர்களுக்கும் தரவரிசை வெளியிடப்படும்.

5. தரவரிசையில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தரவரிசை வெளியிட்ட ஒரு வார காலத்திற்குள் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை (TNEA) செயலர் அவர்களையோ அல்லது அருகிலிருக்கும் மாணாக்கர் வசதி மையங்களிலோ (TFC) நேரில் சென்று நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

## <u>கலந்தாய்வு செயல்முறைகள்</u>

6. சிறந்த விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுகள் போன்ற சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு இணையதளம் வாயிலாக முதலில் நடைபெறும். அதனை தொடர்ந்து பொது கலந்தாய்வு, தொழில் பிரிவு மாணாக்கர்களுக்கான கலந்தாய்வு, 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்த மாணாக்கர்களுக்கு 7.5% முன்னுரிமை அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு ஆகியவை ஒரே நேரத்தில் இணையதளம் வாயிலாக நடைபெறும்.

7. கலந்தாய்வானது நான்கு சுற்றுகளில் நடைபெறும். மாணாக்கர்கள் தாங்கள் பெற்ற தரவரிசை அடிப்படையில் சுற்றுகளில் பங்கு பெறலாம். ஒவ்வொரு சுற்றிலும் பின்வரும் நிலைகள் இருக்கும்.

   அ) விருப்பப் பட்டியல் நிரப்புதல் (Choice Filling)
   ஆ) பாடப்பிரிவினை ஒதுக்கீடு செய்தல் (Allotment)
   இ) ஒதுக்கீட்டை உறுதி செய்தல் (Confirmation)
   ஈ) கல்லூரியிலோ அல்லது மாணாக்கர் வசதி மையங்களிலோ (TFC) கல்லூரி கட்டணத்தை செலுத்தி சேர்க்கையை உறுதி செய்தல் (Admission)

8. விருப்பப் பட்டியல் நிரப்புவதற்கு மாணாக்கர்களுக்கு மூன்று நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். அவர்களின் விருப்ப வரிசைப்படி கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகள் நிரப்ப வேண்டும். விருப்பப் பட்டியல்களின் வரிசை மிகவும் முக்கியமானதாகும். எனவே, எத்தனை விருப்பங்கள் வேண்டுமானாலும் மாணாக்கர்கள் பூர்த்தி செய்யலாம்.

9. கல்லூரி மற்றும் பாடப்பிரிவுகளுக்கான ஒதுக்கீடானது அவர்கள் தேர்வு செய்த விருப்பப் பட்டியல், அவர்களது தரவரிசை மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படும்.

10. சேர்க்கை இட ஒதுக்கீடு அளிக்கும் நிலையில், மாணாக்கர்களுக்கு பின்வரும் வாய்ப்புகள் வழங்கப்படும். இரண்டு நாட்களுக்குள் ஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், மாணாக்கரின் சேர்க்கை ரத்து செய்யப்பட்டு அடுத்த சுற்றுக்கு நகர்த்தப்படுவார்.

<u>உறுதிபடுத்துவதற்கான பல்வேறு தேர்வுகள்:</u>

i. **ஒதுக்கப்பட்ட இடத்தை உறுதி செய்தல் மற்றும் அக்கல்லூரியில் சேருதல் (Accept and Join)**

மாணாக்கர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரி மற்றும் பாடப்பிரிவு திருப்திகரமாக இருந்தால், தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையை (Provisional Allotment Order) பதிவிறக்கம் செய்து ஒதுக்கப்பட்ட கல்லூரியில் ஆணையில் குறிப்பிட்ட நாட்களுக்குள் (7 நாட்களுக்குள்) சேர வேண்டும். குறிப்பிட்ட நாட்களுக்குள் கல்லூரியில் சேராத மற்றும் கல்லூரியில் உரிய கட்டணத்தை செலுத்தாத மாணாக்கர்களின் ஒதுக்கீட்டு ஆணையானது ரத்து செய்யப்படும். மேலும், அந்த மாணாக்கர்கள் அடுத்த கலந்தாய்வு சுற்றுகளில் கலந்து கொள்ள இயலாது.

அவ்வாறு சேராத மாணாக்கர்களின் இடங்களானது மேல் நோக்கிய நகர்வுக்கு காத்திருக்கும் மாணாக்கர்களின் சேர்க்கைக்காக அனுமதிக்கப்படும்.

ii. **ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மேல் நோக்கிய நகர்தலுக்காக காத்திருத்தல் (Accept and Upward)**

மாணாக்கர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் திருப்திகரமாக இருந்தாலும், மேலும் அவர் தேர்வு செய்த விருப்ப இடங்களுக்கு மேல் நோக்கிய நகர்தலுக்காக காத்திருக்கலாம். இந்நேர்வில் அவருக்கு தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை (Tentative Allotment Order) வழங்கப்படும். அவர்கள் அருகிலுள்ள மாணாக்கர் வசதி மையத்திற்கு (TFC) சென்று அதில் குறிப்பிட்ட நாட்களுக்குள் (7 நாட்களுக்குள்) கட்டணம் செலுத்தி

மேல் நோக்கிய நகர்விற்கும் முந்தைய ஆணையை உறுதி செய்யவும் வேண்டும். தவறும்பட்சத்தில், அந்த ஆணையானது ரத்து செய்யப்படும். மேலும், அவர்கள் அடுத்த கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

உதாரணமாக, ஒரு மாணவருக்கு அவர் தேர்வு செய்த 5வது இடம் ஒதுக்கப்பட்டிருந்தால், அவர் 1, 2, 3, 4 ஆகிய இடங்களுக்காக இத்தேர்வினை தேர்ந்தெடுக்கலாம். ஒரு வேளை மேல் நோக்கிய நகர்வில் மேற்கண்ட விருப்ப வரிசை இடங்கள் கிடைக்காதபட்சத்தில், அவர் மாணாக்கர் வசதி மையத்தில் கட்டணம் செலுத்தியதன் மூலமாக அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 5வது இடத்திற்கான கல்லூரி மற்றும் பாடப்பிரிவு வழங்கப்படும்.

ஒரு வேளை அந்த மாணாக்கருக்கு 5வது இடத்தை விட சிறந்த தேர்வு கிடைக்கும்பட்சத்தில், அவர் கட்டிய கட்டணமானது 2 நாட்களுக்குள் அவர் சேர்க்கை பெற்ற கல்லூரிக்கு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் மாற்றப்படும். மேலும், அந்த மாணாக்கர் 7 நாட்களுக்குள் அந்த கல்லூரியை அணுகி சேர்க்கை பெற வேண்டும்.

iii. **ஒதுக்கீட்டை நிராகரித்தல் மற்றும் மேல் நோக்கிய நகர்தலுக்காக காத்திருத்தல் (Decline and Upward)**

மாணாக்கர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரி திருப்திகரமாக இல்லையெனில், அவர் அதனை நிராகரித்து, அவரது அடுத்த விருப்ப இடத்தை மேல் நோக்கிய நகர்தலில் பெறலாம். மாணாக்கர்கள் அவ்வாறு மேல் நோக்கிய நகர்தலில் விருப்பமான இடத்தை பெற இயலாவிட்டால் அடுத்த சுற்றுக்கு செல்லலாம்.

iv. **ஒதுக்கீட்டை நிராகரித்தல் மற்றும் அடுத்த சுற்றுக்கு செல்லுதல் (Decline and Move to next Round)**

மாணாக்கர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட இடம் திருப்திகரமாக இல்லையெனில், மேல் நோக்கிய நகர்தலுக்கு காத்திருக்காமல், அடுத்த சுற்றில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம்.

v. **நிராகரித்தல் மற்றும் வெளியேறுதல் (Decline and Quit)**

மாணாக்கர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் திருப்தி அடையாமல் இருந்தால், அதனை தொடர்ந்து வரும் சுற்றுகளிலும் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்காமல் கலந்தாய்விலிருந்து வெளியேறலாம்.

vi. **மேல் நோக்கிய நகர்தல் அல்லது அடுத்த சுற்றுக்கு செல்லுதல் (Upward or move to next Round)**

இந்த தேர்வானது மாணாக்கர்களின் விருப்ப வரிசையின்படி சேர்க்கை ஏதும் ஒதுக்கீடு செய்யாதபட்சத்தில் வருவதாகும். மேலும், மேல் நோக்கிய நகர்தலில் சேர்க்கை கிடைக்காதபட்சத்தில், அடுத்த கலந்தாய்வு சுற்றில் கலந்து கொள்ளலாம்.

11. அரசு பள்ளி மாணாக்கர்களுக்கான 7.5% சதவீத முன்னுரிமை இட ஒதுக்கீடு முறையில் விண்ணப்பித்த மாணாக்கர்கள், முதல் தலைமுறை பட்டதாரிகள் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகைக்கு (PMSS) தகுதியான மாணாக்கர்கள், சேர்க்கைக்கு கல்லூரியையும், மேல் நோக்கிய நகர்தல் நிகழ்விற்கு (Upward) மாணாக்கர் வசதி மையங்களையும் கட்டாயமாக அணுகவேண்டும். ஆனால், அவர்களுக்கு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

12. ஒவ்வொரு சுற்றிலும் மேல் நோக்கிய நகர்வு ஆரம்பிப்பதற்கு முன் கல்லூரியில் சேர்க்கையை உறுதிப்படுத்தாத மற்றும் மாணாக்கர்களின் வசதி மையங்களில் கட்டணம் செலுத்தி சேர்க்கையை உறுதிப்படுத்தாத மாணாக்கர்களின் சேர்க்கை இடங்களானது அந்தந்த சுற்றில் மேல் நோக்கிய நகர்தலில் சேர்க்கப்படும். ஒவ்வொரு சுற்றின் நிறைவிலும் உள்ள காலியிடங்கள் அடுத்த சுற்று கலந்தாய்வில் காண்பிக்கப்படும்.

13. அனைத்து கல்லூரிகளும் தமிழ் நாடு பொறியியல் சேர்க்கை இணையதளத்தில் மட்டுமே சேர்க்கை வழிமுறைகளை

மேற்கொள்ளவேண்டும். இந்த இணையதளமே பின்னர் சேர்க்கை ஒப்புதல் வழங்குதல், மாணாக்கர் சேர்க்கை மையங்களில் கட்டணம் செலுத்துதல், முதல் தலைமுறை மாணாக்கர் உதவித் தொகை பெறுதல் மற்றும் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கான 7.5% முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீட்டில் பயன்பெறுதல் போன்ற பணிகளுக்கான பிரத்யேக இணையதளமாக விளங்கும்.

14. அனைத்து கலந்தாய்வு சுற்றுகளும் (துணை கலந்தாய்வு மற்றும் SCA to SC) முடிந்த பின் காலியிடங்கள் கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கைக்கு அளிக்கப்படும். இது குறித்த தகவல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் அறிவிக்கப்பட்ட பின்பே கல்லூரிகள் மாணாக்கர் சேர்க்கையை நடத்த வேண்டும்.

- தமிழ் நாடு பொறியியல் சேர்க்கை கலந்தாய்வு வழிமுறைகளுக்கான கருத்து வரைபடம் பின்வரும் படம் I, II, III மற்றும் IVல் விவரிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை

## <u>வழிகாட்டு நெறிமுறைகள்</u>

அறிவிப்பாணை வெளியிடுதல்

↓

www.tneaonline.org இணைய தளத்தில் பதிவு செய்தல்

↓

சான்றிதழ்களை இணைய வழியாக மாணாக்கர் வசதி மையங்களிலோ அல்லது எந்த இடத்திலிருந்தோ பதிவேற்றம் செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல்

↓

சம வாய்ப்பு எண் ஒதுக்கீடு செய்தல்

↓

விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களை இணைய வழியாக மாணாக்கர் வசதி மையங்களில் சரிபார்த்தல்

↓

தர வரிசை வெளியிடுதல் மற்றும் மாணாக்கர்களின் குறைகளை மாணாக்கர் வசதி மையங்களில் தீர்த்து வைத்தல்

↓

இணைய வழியில் கலந்தாய்வு நடைபெறுதல்


↓

சேர்க்கை ஆணை வழங்குதல் மற்றும் கல்லூரியில் சேர்க்கை

# உறுதிபடுத்துவதற்கான பல்வேறு தேர்வுகள்

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட இடத்தை உறுதி செய்தல் மற்றும் அக்கல்லூரியில் சேருதல் | தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையை பதிவிறக்கம் செய்து ஒதுக்கப்பட்ட கல்லூரியில் ஆணையில் குறிப்பிட்ட நாட்களுக்குள் சேர வேண்டும். |
| ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மேல் நோக்கிய நகர்தலுக்காக காத்திருத்தல் | தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையை அருகிலுள்ள மாணாக்கர் வசதி மையத்திற்குசென்று குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்டணம் செலுத்தி மேல் நோக்கிய நகர்விற்கும் முந்தைய ஆணையை உறுதி செய்யவும் வேண்டும். |
| ஒதுக்கீட்டை நிராகரித்தல் மற்றும் மேல் நோக்கிய நகர்தலுக்காக காத்திருத்தல் | மாணாக்கர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரி திருப்திகரமாக இல்லையெனில், அவர் அதனை நிராகரித்து, அவரது அடுத்த விருப்ப இடத்தை மேல் நோக்கிய நகர்தலில் பெறலாம். |
| ஒதுக்கீட்டை நிராகரித்தல் மற்றும் அடுத்த சுற்றுக்கு செல்லுதல் | மாணாக்கர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட இடம் திருப்திகரமாக இல்லையெனில், மேல் நோக்கிய நகர்தலுக்கு காத்திருக்காமல், அடுத்த சுற்றில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம் |
| ஒதுக்கீட்டை நிராகரித்தல் மற்றும் வெளியேறுதல் | மாணாக்கர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் திருப்தி அடையாமல் இருந்தால், அதனை தொடர்ந்து வரும் சுற்றுகளிலும் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்காமல் கலந்தாய்விலிருந்து வெளியேறலாம். |
| மேல் நோக்கிய நகர்தல் அல்லது அடுத்த சுற்றுக்கு செல்லுதல் | மாணாக்கர்களின் விருப்ப வரிசையின்படி சேர்க்கை ஏதும் ஒதுக்கீடு செய்யாதபட்சத்தில்மற்றும் மேல் நோக்கிய நகர்தலில் சேர்க்கை கிடைக்காதபட்சத்தில், அடுத்த கலந்தாய்வு சுற்றில் கலந்து கொள்ளலாம். |

## ஒரு கலந்தாய்வு சுற்றில் நடைபெறும் செயல்முறைகள்



# கலந்தாய்வு வழிமுறைகள்

